தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுப் பேரணி**

எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுப் பேரணி 1-11-2014 அன்று தேசிய மாணவர் படை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர்.ஆர்.ரபிந்தரன் அவர்களால் காலை 9.00 மணிக்கு துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு முதல்வர் முனைவர் எஸ். மோகன் கலந்து கொண்டு சிறப்பித்தார். இப்பேரணியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அருள்மிகு மருதமலையாண்டவர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தேவஸ்தான மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜே. சீ. மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பேரணியாக வலம் வந்தனர். வேளாண்மைக்கல்லூரி முதல்வர் முனைவர். மகிமைராஜா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்கும் வாக்கியங்களைச் சுமந்த பதாகைகளைக் கையிலேந்தி மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்க பேரணியாக மாணவர்கள் வலம் வந்தனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தேசிய மாணவியர் படை அதிகாரிகள் லெப்டினன்ட் செல்லமுத்து மற்றும் மனோண்மணி, வடவள்ளி-அருள்மிகு மருதமலையாண்டவர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தேவஸ்தான மேல்நிலைப்பள்ளி தேசிய மாணவர் படை அதிகாரி கார்த்திகேயன், வடவள்ளி-ஜே. சீ. மேல்நிலைப் பள்ளி தேசிய மாணவர் படை அதிகாரி திருமதி. தீபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணியாக வலம் வந்தனர்.

இன்றைய வேகமான உலகில் எய்ட்ஸ் நோய் எவ்வளவு கொடுமையானது என்றும் எய்ட்ஸ் நோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளைப் பாதுகாப்பதை வலியுறுத்தும் வகையில் இப்பேரணி அமைந்தது. மேலும் மாணவர்கள் லாலிரோடு மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூங்காஅருகில் அருமையான தெருக்கூத்தை நடத்தினர். பேரணி ஏற்பாடுகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தேசிய மாணவியர் படை அதிகாரிகள் லெப்டினன்ட் செல்லமுத்து மற்றும் மனோண்மணி செய்திருந்தனர். பேரணி காலை 11.00 மணிக்கு நிறைவு பெற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்